Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]  ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.  [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆனிமீ 29௳ 12—7—1948 ஹிஜிரி 1367 ரம்ஜான்மீ 4௳ திங்கட்கிழமை. } இதழ் 25

## ஹைதராபாத் பிரச்னையும் நமது கடமையும்.

இந்தியா ஹைதராபாத் சமரஸ நம்பிக்கை தற்காலிகமாய் நிறைவேருமல் போய்விட்டது. உத்தேச ஒப்பந்தமும் அதன் முறிவுக்கான காரணங்களும் தெரிந்தேயிருக்கின்றன. பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் இந்தியா அனுசரித்துவரும் உயரிய நிர்மாணப்போக்கு அமைதி, சமாதானம், ஜனநாயகத்தில் இந்தியா கொண்டுள்ள அபார ஆர்வத்தை உலகுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை முறிக்க தான் விரும்பவில்லையென்று ஹைதராபாத் சொல்லுகிறது. "சுதந்திரம், சமத்துவம், ஐக்கியத்தின் நேசக்கதவு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஹைதராபாத் அதற்குத் தயாராயிருந்தால் ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம். ஆனுல் பேச்சு வார்த்தைகளில் காலத்தைக் கழிப்பதால் பிரயோஜனமில்லை" யென்று நம் அருமைப் பிரதமர் பண்டித நேருவும் சொல்லியிருக்கிருர்.

ஒரு பக்கம் ஹைதராபாத் இணைப்பு விஷயத்தில் இந்தியா பலவந்தமாய் நடப்பதாக சுயநலக்கார ஆங்கில பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றன. இன்னெரு பக்கம் இந்திய அரசாங்கம் பலஹீனத்தைக் காட்டுவதாகவும் அதைவிட்டு உடனே ஹைதராபாத்துடன் போர் தொடுக்கவேண்டுமென்றும், முற்போக்காளர்களான சோஷலிஸ்டுகளும் பிற்போக்காளர்களான மஹாசபைக்காரர்களும் யோஜனை கூறுகின்றனர்.

இந்நிலையில் தீர்க்கமாய் அலசிப் பார்ப்பவர்களுக்கு ஹைதராபாத் பிரச்னையில் பல சிக்கலான அம்சங்கள் இருப்பது விளங்கமுடியும். சுதந்திர சமுதாய அங்கத்தினர்கள் என்ற முறையில் அவைகளையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு இந்திய அரசாங்கத்தைக் குறை கூறுவதோ இறுதி முடிவு செய்வதோ சரியல்ல.

1. ஹைதராபாத் விஷயம் தேசியப் பிரச்னை மட்டுமின்றி பிரிட்டிஷ் அமெரிக்க கோஷ்டியின் நலத்துடன் சம்மந்தப்பட்ட சர்வதேசப் பிரச்னையும் ஆகிவிட்டது. ஹைதராபாத், இந்தியாவில் பிரிட்டிஷ் முக்கோணக் கொள்கையின் மூன்ருவது கோணமாகும். முக்கோணத்தின் ஒரு மூலையில் மேற்கு பாகிஸ்தானும் இன்னெரு மூலையில் கிழக்கு பாகிஸ்தானும் இருக்கின்றன. மூன்ருவது மூலையில் ஹைதராபாத் இருக்கிறது. இன்று மெள்ள மெள்ள உத்தேச சீக்கிஸ்தானுன நான்காவது கோணம் உருவாகி வருகிறது. நம் தலைநகருக்கு சமீபத்தில் பிரிட்டனின் முக்கோணக் கொள்கையை நாற்கோணமாக விஸ்தரிக்கும் முயற்சிகள் நடக்கின்றன.

நாம் சுதந்திரமடைந்திருப்பது உண்மையே. ஆயினும் பிரிட்டனுடன் உறவு என்ற நிபந்தனையுடன் கூடிய சுதந்திரம் என்பதை மறந்து விடுவதற்கில்லை. இறுதியில் ஒப்பந்தத்தின் மூலம் அந்த உறவு நிர்மானிக்கப்படும். நமக்கு எல்லா விதத்திலும் சுதந்திரம் இருப்பினும் பிரிட்டிஷ், அமெரிக்கக்கோஷ்டிக்கு

எதிராக நடப்பதில் சுதந்திரமில்லை. நம்முடைய இந்திய சுதந்திரம் சம்மந்தமாக வெளியான மன்னர் பிரான் பிரகடனத்தில் ஜாடையாகவும் சில இடங்களில் தெளிவாகவும் அந்த நிபந்தனை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகம் மூன்றாவது யுத்தத்தை நோக்கி முன்னேறுகின்றது. இரண்டாவது மஹாயுத்தத்தில் ஜெர்மனியும், ஜப்பானும் முறியடிக்கப்பட்ட பிறகு ஐரோப்பாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே யுத்தத்துக்கு தடையாக இருந்துவந்த சுவர் சரிந்துவிட்டது.

இந்தியா நாற்பது கோடி மக்களைக்கொண்ட தொருநாடு எல்லையற்ற இயற்கை வசதிகளும் ஜனசக்தியும் கொண்டதொரு தேசம். ரஷ்யா, அமெரிக்கா இரண்டுமே இந்தியா ஐக்கியமாயிருப்பதை எதிர்க்கின்றன. பலம் வாய்ந்த சுதந்திர ஐக்கிய இந்தியா ஏதாவதொரு கோஷ்டியில் சேருவதால் எதிர் கோஷ்டி அழிந்துவிடமுடியும். இந்தியா பிரிக்கப்பட்டதற்கு அதுதான் காரணம். உலகத்தின் மூன்று பெரிய வல்லரசுகள் இந்தியாவை மேலும் பிரிவினைக்குள்ளாக்கப் பார்க்கின்றன. ஆகையால் பிரிவினையின் அபாயம் நம்மைவிட்டுத் தொலைந்தபாடில்லை.

பிரிட்டிஷ் அமெரிக்க கோஷ்டியின் தலைவர்கள் உலக முஸ்லிம் நாடுகளை பாகிஸ்தான் தலைமையில் ஒன்று திரட்டி மூன்றாவது யுத்த கோஷ்டி ஒன்றை உருவாக்க விரும்புகின்றனர். அவசியம் ஏற்படும் பொழுது தங்கள் சுயநலத்துக்காக அவர்களை உபயோகித்துக்கொள்வதே அதன் நோக்கம்.

இந்தியா இரண்டாகப் பிரிந்த பிறகும் முப்பத்தி மூன்று கோடி மக்களைக்கொண்ட ஒரு நாடாக விளங்குவதைப் பார்த்து பிரிட்டனும் அமெரிக்காவும் சந்தேகிக்கின்றன. எனவே மூன்றாவது மஹாயுத்தத்தில் நம்முடைய சிப்பாய்கள் ரத்தம், உற்பத்தி, தொழிற்சாலைகள், செல்வம் அனைத்தும் அவர்களுக்காக அர்ப்பணிக்கப்படுமென்ற உறுதியை இந்தியாவிடமிருந்து பெறவே விரும்புகின்றன. அவ்வித நிர்ப்பந்தத்துக்கு இணங்க இந்தியா சம்மதிக்காவிட்டால் இங்குள்ள அன்னிய சக்திகளின் ஏஜெண்டுகள். நம்மிடையே உள்நாட்டுக் கலகத்தை கிளப்பிவிட முயற்சி செய்வார்கள். நம் பரஸ்பர அமைதி, சமாதானத்தைக் குலைத்து சமஸ்தான பிரச்னையில் மேலும் பிரிவினையைக் காட்டி மிரட்டுவார்கள். இல்லையேல் காஷ்மீர் பிரச்னைக்குக் காரணமென்ன? சமஸ்தான தொகுதிகளுக்கும் அவைகளின் ராஜ பிரமுகர்களுக்கும் அர்த்தமென்ன? ஹைதராபாத் சண்டித்தனம் சர் வால்டர் மாங்டன் நடமாட்டத்தின் அந்தரங்கமென்ன! பிரிட்டிஷ் அமெரிக்க பத்திரிகைகள் இவ்விஷயத்தில் நம்மை எதிர்ப்பதன் நோக்கமென்ன? மிஸ்டர் ஆட்லி, மிஸ்டர் சர்ச்சிலின் டாமி சிப்பாய்களும், மிஸ்டர் பட்லர் போன்றவர்களும் செய்யும் பிரசங்கங்களின் லட்சியமென்ன? ஆசியப் பொருளாதார மஹாநாட்டில் அமெரிக்க பிரதிநிதியான மிஸ்டர் கிரேடி ஹைதராபாத்தை பிரஸ்தாபிக்கவேண்டிய அவசியமென்ன? இந்திய நலனைக் கருதுவதாக சொல்லிக்கொள்பவர்கள் இந்திய சர்க்கார் அனுசரிக்கும் கொள்கையைக் கண்டிப்பதற்கு முன் ஹைதராபாத் பிரச்னையிலுள்ள மேற்கூறிய அம்சத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியதவசியம்.

2. பிரச்னையின் இரண்டாவது அம்சம் முற்றிலும் அரசியல் தன்மை வாய்ந்ததாகும். ஹைதராபாத் அதிகார வர்க்கம் நவீன அரசியலில் தேர்ச்சி பெற்று கல்வி கற்ற கட்டுப்பாடான கூட்டமாக இருக்கின்றது. அதில் அளவற்ற பணம் படைத்த பெரிய பெரிய சமஸ்தானாதிபதிகளும் இருக்கின்றனர். நவீன ஹைதராபாத்தை உருவாக்கிய ஒரு பரதேச்சாதிகளின் தலைமை அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அதிகாரத்திலிருக்கும் கர்விகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பினும் அவர்கள் நசுக்கப்பட்ட மக்களை தங்கள் செல்வாக்கின் வலையில் சிக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். அதிகார வர்க்கம் அகண்மாத்தாய் முஸ்லிம்களாக இருக்கிறது. பெரும்பான்மை மக்களின் நலன்களை ஆக்ரமிக்க உரிமை கொண்டாடுவதுடன் அரசியலில் தன்னைப் பெரும்பான்மையாகவும் நினைக்கின்றது. இந்திய யூனியனுடன் ஐக்கியமாவதை அடிமைத்தனத்துக்கும் அழிவுக்கும் சமமாகவே பாவிக்கின்றது. அதற்கு இந்திய முஸல்மான்களின் நிலைமையே காரணம்.

அரசாங்கம் இந்திய முஸ்லிம்களைப் பாதுகாக்க சகல துறைகளிலும் முயற்சி செய்தது வாஸ்தவமே, ஆயினும் விடுதலையுடன் கூடவே தங்கள்மீது சுமத்தப்பட்ட கடமைகளை மறந்து அநேக இந்தியர்கள் காட்டுமிராண்டிகளாக மாறினர். இந்தியாவின் அமைதி குலைந்தது. வருந்தத் தக்க சம்பவங்கள் நடந்தன. அதை ஒன்றுக்கு நூறாக மிகைப்படுத்திக் கூறி அங்கு அதிகாரத்திலிருக்கும் கூட்டமும், அன்னிய ஏஜெண்டுகளும் ஹைதராபாத் முஸ்லிம்களிடையே மும்முரமாய் பிரசாரம் செய்துவருகின்றனர். இந்தியாவுடன் சேர்ந்தால் கிழக்கு பஞ்சாப் கதியே உங்களுக்கு நேருமென்று மசூதிகள், பள்ளிக்கூடங்கள், பொதுக்கூட்டங்களில் பிரசாரம் செய்கின்றனர்.

இந்தியப் பிரிவினைக்கு சந்தேகமின்றி முஸ்லிம்களே பொறுப்பு. பிரிவினையால் ஒரு புரம் இந்திய முஸல்மான்கள் தங்கள் தவறான போக்கின் பலனாக துர்கதி அடைந்தனர். இன்னொரு புரம் இந்திய முஸ்லிம்களின் கேவல நிலைமையைப் பார்த்து ஹைதராபாத் முஸ்லிம்கள் இந்தியாவுடன் ஐக்கியப்படுவதை அடிமையென்றும் அழிவென்றும் நினைக்கின்றனர். சும்மா சாவதைவிட சண்டை போட்டுச் சாகலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டதாகத் தெரிகிறது. சண்டையும் சாவும் பணக்காரர்களால் முடியாத காரியம் எனவே காஸிம் ரஸ்வி முனைத்தார் ஐந்து லட்சம் ரஜாக்கர்களின் சைன்யம் உருவாயிற்று பாமர மக்கள் அந்த சைன்யத்தில் சேருகின்றனர். பணக்காரர்களும் அதிகார வர்க்கமும் நிதி கொடுத்து உதவுகின்றனர். தர்க்க ரீதியாக ஏற்பட்ட இந்த நிலைமையையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

3. ஹைதராபாத் பிரச்னை பெரும் தொல்லையாகிவிட்டதென்றும் சுதந்திர ஹைதராபாத் தனியரசு இந்தியப் பிணத்தின்மீதுதான் நிர்மாணிக்கலாம் என்றும் பண்டித ஜவஹர்லால் நேரு கூறினார். அவர் கூறியது முற்றிலும் உண்மை. காஸிம் ரஸ்வியின் பிரசங்கங்கள் அழிவுக்கு அடிகோலுவதாயிருக்கின்றன. ஐந்து லட்சம் ரஜாக்கர்களின் கமாண்டர் என்று உரிமை கொண்டாடுகிறார். அந்த சக்தி சமாதானத்தை லட்சியமாகக்கொண்டால் மனித வர்க்கத்துக்கு பெரும் சேவையாக இருக்கமுடியும். இல்லையேல் இந்தியாவைவிட ஹைதராபாதே அதிகமாய் அனுபவிக்க வேண்டியிருக்குமென்பது நிச்சயம்.

4. நெருக்கடியான இச்சமயத்தில் இந்தியர்களுக்கு ஒரே ஒரு கடமை உண்டு. எல்லா வித பயத்தையும் மனதிலிருந்து அகற்றி தங்களுடைய முழு சக்தியையும் அரசாங்கத்தினிடம் ஒப்படைக்க வேண்டும். அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்து சாத்தியமான எல்லா உதவியும் செய்யத் தயாராயிருக்கவேண்டும். நம்முடைய அரசாங்கம் நம் நாட்டின் அரசியல், ராணுவ மர்மங்கள் எல்லாவற்றையும் உணர்ந்தேயிருக்கிறது. சரியான முடிவு செய்யக்கூடிய உரிமை அதற்குத்தான் உண்டு. இப்பிரச்னையில் அரசாங்கத்தின்மீது குறை கூறப்படுவது சில காலம் வரையாகிலும் நிறுத்தப்பட வேண்டும். குறை கூறுவதால் நம்முடைய சக்தி பலஹீனமடைகின்றது. பேச்சு வார்த்தையின் முறிவு விஷயத்தில் அரசாங்கத்தின்மீது குறை கூறுபவர்கள் உலகத்தின் பெரிய பெரிய பிரச்னைகள் பெரிய பெரிய அறிவாளிகளின் முன் இன்னும் பின்னிக்கொண்டு கிடக்கின்றன; வருஷக் கணக்கில் முயற்சிகள் செய்தும் பரிகாரம் காண முடியவில்லை என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். ஹைதராபாத் பிரச்னை சாதாரண பிரச்னையல்ல என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் செய்யும் சிறிய தவறும் மாபெரும் இந்திய உபகண்டத்தை அழிவுப் படுகுழியில் தள்ளிவிடக்கூடும். ஹைதராபாத்தை பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடாக்கி ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் மெம்பராக்குவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. சிலர் பாகிஸ்தானுடன் இணைத்து இந்தியா பாகிஸ்தானுக்கிடையே அதிகார பூர்வமான யுத்தத்தை மூட்டிவிடவும் விரும்புகின்றனர். யுத்தம் அவசியமாய்விட்டால் காஷ்மீருக்குப் பிறகு ஹைதராபாத் இரண்டாவது போர்முனையாக இருக்கும். நம்மிடத்திலுள்ள ராணுவத்தின் அளவு என்ன; இரண்டாவது போர்முனைக்கு எவ்வளவு ராணுவம் தேவை; யுத்த தளவாடங்களாலும் ராணுவத்தாலும் எச்சமயத்தில் வேலை வாங்கவேண்டும் என்று முடிவு செய்வது அரசாங்கத்தால் மட்டுமே சாத்தியம்.

5. அதிகாரபூர்வமான யுத்தமோ அல்லது அதிகார பூர்வமற்ற கைகலப்போ ஏற்படும்போது பரிவர்த்தனையின் புதிய பிரச்னையும் கூடவே முளைக்கும். ஹைதராபாததிலிருக்கும் 125 லட்சத்துக்கு மேற்பட்ட ஹிந்துக்களும் கோடிக் கணக்கான தென்னிந்திய முஸ்லிம்களும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு ஓட வேண்டியிருக்கும். இன்றைக்கு ஐம்பது லட்ச அகதிகள் சர்க்காரின் உதவியை நாடியிருக்கின்றனர். கோடிக் கணக்கில் செலவிட்டும் அவர்களுடையகஷ்டம் நீங்கியபாடில்லை. மேலும் பரிவர்த்தனையால் ஏற்படும் புதிய தொல்லைகளை சமாளிப்பது சாமான்ய காரியமல்ல. யுத்தம் மூண்டால் நேரடியாக பாகிஸ்தானும் மறைமுகமாக ஆங்கிலேயர்களும் சட்டத்தின் பெயரால் ஐக்கிய நாட்டு ஸ்தாபனமும் தலையிடுவதுடன் இங்கும் அங்குமாக உள்நாட்டுக் கல்வரங்களும் ஆரம்பித்துவிட்டால் என்ன செய்ய வேண்டியிருக்குமென்பதை அரசாங்கமேதான் முடிவு செய்யமுடியும்.

ஆகையால் அரசாங்கத்தின் முடிவுகளை ஏற்று வேண்டும்போது முழு சக்தியையும் அரசாங்கத்தினிடம் ஒப்படைப்பது ஒன்றே மக்களுடைய கடமை. இன்றைய ஜனநாயக சகாப்தத்தில் ஹைதராபாத்தின் ஜனநாயகத்தைப் பறித்துவிட முடியாது. இந்திய முஸல்மான்கள் பொறுத்தவரை அவசியம் ஏற்படின் தங்கள் அருமைப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் திரண்டு எழுந்து சாத்தியமான சகல துறைகளிலும் இந்திய கவுரவத்தைக் காக்கத் தயாராயிருக்கின்றனரென்று இந்திய முஸ்லிம்கள் சார்பில் உறுதியளிக்க முடியும். இன்று தேசீய அரங்கத்தில் அரசாங்கத்தின் முடிவுகளை மதித்து நடக்கவேண்டியதன் அவசியத்தை எல்லா இந்தியர்களும் உணர்ந்து நடப்பார்களாக!

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 12—7—'48 திங்கட்கிழமை { இதழ் 25

# நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி இந்திய விரோதிகளுக்கு வெற்றி உண்டாக்குவதா?

## நாம் இருப்பதே இடைஞ்சல்

நாம் வாங்கிக்கொடுத்த பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம்களுக்கு நம்மைப்பற்றிய கவலையே கிடையாது. இருந்திருந்தால் ஒரு ஹிந்துவோ, சீக்கியனோ வெளியேறும்படி விட்டிருக்க மாட்டார்கள். துன்புற்ற ஹிந்து, சீக்கியர்கள் இந்தியா வந்தடைந்தால் இங்குள்ள ஏழை முஸ்லிம்கள் கதி என்னவாகுமென்று அவர்களுக்கு தெரியாமலா போயிருக்கும். நிச்சயமாகத் தெரிந்தேதான் இருக்கும். இனி நாம் அவர்களுக்குத் தேவையில்லை. நாம் இருப்பதே அவர்களுக்கு இடைஞ்சலாகவும் இருக்கும் நாம் விழிப்படைந்து அவர்களுடைய மோசடிகளை தெரிந்துகொண்டுவிட்டால் ஆதரித்ததைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமான ஆவேசத்துடன் எதிர்த்து ஐக்கிய இந்திய கோஷங்களால் இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானை தவிடு பொடியாக்கி விடுவர் என்ற பீதி அவர்களுக்கு இருப்பது இயற்கையே. கலகங்கள் பரவக்கூடாது என்ற எண்ணம் காயிதே ஆஜம் அவர்களுக்கு மனப்பூர்வமாக இருந்திருந்தால் இவ்வளவு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்குமா? கலவாப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்தாரா? கூட்டங்களில் பேசினாரா? கலகங்களைக் கண்டித்து வேண்டுகோள்தான் விடுத்தாரா? ஒன்றுகூட இல்லை. பேச விரும்பினாலும் எதைப்பற்றிப் பேசுவது? ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றிப் பேச முடியுமா? அதைப் பற்றிப் பேசினால் அவருடைய இரண்டு சமுதாயக் கொள்கை என்னவாகும்? இரண்டு சமுதாயக் கொள்கை இல்லையானால் காயிதே ஆஜமுக்கே ஆட்டங் கண்டுவிடாதா? ஹிந்துக்களும், முஸ்லிம்களும் சகோதரர்களாய் மீண்டும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொள்ளும் நன்னாளே பாகிஸ்தானுக்கும் காயிதே ஆஜமுக்கும் கடைசி நாளாகும் என்பது மிஸ்டர் ஜின்னாவுக்குத் தெரியும். எனவே வெற்றியை தேடித்தந்த வகுப்புவாத கட்டாரி, இரு சமுதாயக் கோடரி, வெறுப்புத்தீ, துவேஷப்புகை போன்ற கொடிய ஆயுதங்களை இழக்க அவர் எப்படி சம்மதிப்பார். மஹாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, பண்டித கோவிந்த வல்லப பந்த் முதலியோரும், மத்திய சர்க்காரும் கலவரங்களைத் தடுக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு மிஸ்டர் ஜின்னாவின் முயற்சியை ஒப்பிட்டு சொல்லமுடியுமா? அதைச் செய்ய காயிதே ஆஜம் தயாரில்லை என்பது யோஜனைக்குரிய விஷயமே.

## கலகமே பாகிஸ்தானின் அஸ்திவாரம்

மிஸ்டர் ஜின்னா ஒரு கலகத் தலைவர் என்பதை இந்தியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். கலகங்களைத் தூண்டிக் கொண்டிருப்பதுதான் அவருடைய நோக்கம். பதினைந்து வருஷங்களாக மஹாத்மா காந்தி, பாபு ராஜேந்திர பிரஸாத், சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் செய்த சமரச முயற்சிகள் அனைத்தையும் மிஸ்டர் ஜின்னா வியர்த்தமாக்கினார். காங்கிரஸ் அக்கிராசனர் என்ற முறையில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் சமரசத்திற்கு முயன்றபோது அவருக்கு "ஷோபாய்" பட்டத்தை வழங்கினார். இன்று அடைந்துள்ள பாகிஸ்தானின் திட்டத்தையே 1944-ல் மஹாத்மா காந்தி சமர்ப்பித்தார். அன்றே அதை ஏற்றுக்கொள்ளாமல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு அதே திட்டத்தை ஏற்றுக் கொண்டது ஏன் என்பதுதான கேள்வி. அன்றே ஏற்றுக்கொண்டிருந்தால் இத்தனை கலகங்கள் நடந்திருக்காதல்லவா? லக்ஷக்கணக்கான ஏழைகளின் ரத்தமும், இந்திய தாய்மார்களின் கண்ணீரும் சிந்த சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்குமல்லவா? மிஸ்டர் ஜின்னாவுக்கு அது பிடிக்கவில்லை. பிரிவினைக்குப் பிறகு கலவரங்கள் அடங்கிவிடும் என்று நம்பியே காங்கிரஸ் பாகிஸ்தானுக்கு இணங்கிற்று ஆனால் பிரிவினைக்குப் பிறகு கலவரங்கள் அதிகரித்ததேயன்றி குறையவில்லை. அமைதி ஏற்பட்ட பிறகு இந்திய முஸ்லிம்கள் நிதான புத்தியுடன் தங்கள் தவறை உணர்ந்து மீண்டும் இந்திய ஐக்கியத்தில் கவனம் செலுத்துவரென்பது திண்ணம் இதனால் மிஸ்டர் ஜின்னாவின் அரசியல் வாழ்வு மாண்டு மடிந்துபோக நேரிடும். எனவே மிஸ்டர் ஜின்னா கோஷ்டியார் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை விரும்பாதது ஆச்சரியமில்லை. எட்டு

நீண்ட வருஷங்கள் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று தொண்டை கிழிய கோஷித்து துன்பப்பட்ட இந்திய முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் கிடைத்ததும் பன்மடங்கு துன்பங்கள் அதிகரித்துவிட்டன. மிஸ்டர் ஜின்னாவின் நடவடிக்கைகளை கவனித்தால் இந்தியாவில் முஸ்லிம்களை இருக்கவே விடமாட்டார் போல் தோன்றுகிறது. இன்னும் எத்தனை வருஷங்கள் வரை பரிவர்த்தனை கொடுமைகளை இந்திய முஸ்லிம்கள் சகித்துக்கொள்ள வேண்டிவருமோ? அத்துடன் நின்றுவிடுமா? பிறகு இந்திய பாகிஸ்தான் யுத்தக் கொடுமைகள் இனி நிம்மதியாக வாழலாம் என்ற மனக்கோட்டை.யைத் தகர்த்தெரிந்துவிடும். பாகிஸ்தானின் விபரீதப் போக்கைப் பார்த்தால் மிஸ்டர் ஜின்னா இரண்டு நாடுகளிடையே சண்டை மூட்டியே தீருவார் என்று எண்ண இடமேற்படுகிறது இந்திய முஸல்மான்களைப் பற்றி மிஸ்டர் ஜின்னாவுக்கு கவலையே கிடையாது. பீகார் கலவரங்களின்போது மிஸ்டர் ஜின்னாவின் வீட்டில் பிரபல லீகர்கள்கூடி முஸ்லிம்கள் கொல்லப்படும் செய்திகள் டெலிபோன் மூலம் வரும்போதெல்லாம் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள் என்று நேரில் கண்டவர்கள் பலர் சொல்லுகிறார்கள். பாகிஸ்தான் கோரிக்கைக்கு பீகார் சம்பவர்கள் ஒன்றே போதுமானது என்பது அவர்களுடைய முடிவு. பீகாரிலிருந்து கிடைத்த தகவல்களைச் சேகரித்துக்கொண்டு மிஸ்டர் ஜின்னா லண்டனுக்கு சர்ச்சிலிடம் புறப்பட்டார். பீகார் முஸ்லிம்களின் ரத்தக் கண்ணீரைத் துடைக்க பீஹாருக்குப் போகவில்லை. கேட்டதற்கு "பீஹார் போவதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நான் சிந்திவிட்டுப்போன ரத்த ஓட்டமுள்ள ஒரு அரசியல்வாதி" என்று பதிலளித்தார். தனக்கு ஏற்பட்ட ஒரு சிறு கத்தியின் லேசான உராய்தலுக்கு பதினெட்டு முறை கோர்ட்டில் ஆஜராகும்பொழுது அந்த ரத்தம் சிந்திவிட்டுப் போகாமலிருந்தது அதிசயமே. நான்கு கோடி இந்திய முஸல்மான்கள் இந்திய யூனியனுடன் சேர்வதை மிஸ்டர் ஜின்னா விரும்ப முடியாது. இதனால் இந்தியா பலப்படுவதுடன் ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமைக்குப் பிறகு மிஸ்டர் ஜின்னாவின் கபட நாடகம் வெளியாகிவிடும். அப்பொழுது "காயிதே ஆஜம் ஜிந்தாபாத்" என்று கோஷித்த அதே முஸ்லிம்கள் "மிஸ்டர் ஜின்னா ஒழிக" என்று கோஷிப்பார்கள். ஆகையால் அவர் ஹிந்து முஸ்லிம்களை பிரித்து விடவே முயற்சிப்பார் என்பது நிச்சயம்.


## நாசம் மூன்று தலைமுறைக்கு

டில்லி முஸ்லிம் அகதி முகாம் ஒன்றுக்கு நவாப் ... அவரைக்கண்டவுடன் ஆவேசத்துடன் வாயில் வந்தபடி திட்டிக்கொண்டே முஸ்லிம்கள் அவரைத் தாக்க முயற்சித்தார்கள் அவரைத் தடுத்து நிறுத்திய முஸ்லிம் கிழவர் ஒருவர் நவாப் ஜாடாவை நோக்கி "நாம் உங்களைத் திட்ட விரும்பவில்லை. இஸ்லாமில் திட்டுவதற்கும் அனுமதியில்லை. எங்களுடைய மூன்று தலைமுறைகளை நாசம் செய்த உங்களை ஆண்டவனிடம் ஒப்படைக்கிறோம்" என்று சொல்லி பெருமூச்சுவிட்ட அந்த கிழவர் தன் பக்கத்தில் நின்றிருந்த மகனையும், பேரனையும் சுட்டிக் காட்டினார். இந்திய முஸல்மான்களின் வசை புராணம் ஆரம்பமாகிவிட்டதை உணர்ந்த மிஸ்டர் ஜின்னா பெரிய புதிர் ஒன்றை போட்டார். இந்திய விவகாரத்தில் தலையிட்டு தீர்த்து வைக்கும்படி ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தைக் கோரினார். இதைக் கேட்டதும் ஏழை இந்திய முஸ்லிம்களுக்கு ஒருவித நம்பிக்கை ஏற்பட்டது. இனி ஹிந்துக்களின் ஆதிக்கம் நிலைக்க முடியாது. வெள்ளையன் திரும்பி வந்துவிடுவான் என்பதே. இன்னொருபுரம் ஹிந்துக்களின் கோபம் பொங்கியெழுந்தது ஓய்ந்திருந்த கலகங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. மகாத்மா காந்தி, பண்டித நேரு முதலியோரின் சமாதான முயற்சிகள் பலனற்றதாகிவிட்டது. மிஸ்டர் ஜின்னாவின் தந்திரம் பலித்தது. இந்த நாடு பொசுங்கி சாம்பலாக குவிந்து போவதாக இருப்பினும் மறுபடி வெள்ளை ஆதிக்கம் திரும்புவதை எந்த ஒரு ஹிந்துவும் சம்மதிக்கமாட்டான் என்பது மிஸ்டர் ஜின்னாவுக்கு நன்றாகத் தெரியும். ஹிந்துக்களை ஆத்திரமூட்டும் ஒரே நோக்கத்துடன் இம்மாதிரியான புதிர்களை போட்டுவருகிறார். இந்தியாவில் குழப்பத்தை உண்டுபண்ணி அதன் பயனை அடைவதே வகுப்புவாதிகளின் நோக்கமாக இருக்கிறது. ஆதலால் நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி இந்திய விரோதிகளை வெற்றியடையச்செய்யாதீர்கள்.


**Namath Watch Company,**

**37-38, RATTAN BAZAAR,**

**P. T. MADRAS.**



**"எலிடா"**

**ரூபா 95/-**

ரோல்டு கோல்டு 7¾ சைஸ் ஆப்டிக் கிளாஸ் கர்வட் ஷேப்.

ரோமர், பியர்பு, ரிக்கார்டு,

இன்னும் அநேக ரகங்கள் சப்ளை செய்யப்படும்

நேர்த்தியான லேடீஸ் கடிகாரங்களும் கிடைக்கும்.

# பாகிஸ்தான் பத்திரிகை செய்திகள்.

## இன்குலாப் (லாகூர்)

தற்சமயம் லாகூரில் குண்டர்களுடைய காலித்தனம் அதிகரித்துவிட்டது. இன்னொருபுறம் அகதிகளால் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துவிட்டன. நல்ல ஆடை தரித்த குண்டர்கள் வழிநடக்கும் பெண்களை தொந்திரவுகளுக்குள்ளாக்குகின்றார்கள் கல்லூரிகளில் படிக்கும் மாணவிகள் கூட அவர்களுடைய தொந்திரவுகளுக்கு ஆளாகிறார்கள் ஜின்னாபார்க்கில் நடைபெற்றுவரும் அட்டூழியங்களை கண்டுபிடிப்பதற்காக ஸ்பெஷல் போலீஸ் நியமிக்கப்பட்டு இதுவரை நாற்பது காலிகளை கைது செய்திருப்பதாக தெரிகிறது. பர்தா அன்றி வெளிவரும் பெண்களை இஸ்லாமிய விரோதிகள் என்று சொல்லி காலிகள் நடந்துகொள்ளும் விதம் சகிக்கமுடியாததாக இருக்கிறது. இவ்வித காலித்தனங்களை தடுக்க பத்திரிகைகள் முன்வர வேண்டும்.

## எஹ்ஸான் (லாகூர்)

தாசிகள் மலிந்தும், தெருவிலும்கூட சாராயங்கள்போன்ற மதுபானங்களை விற்றும், பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் காணப்படாததும், இஸ்லாமிய கல்லூரிகள் இன்றி ஆங்கிலக் கல்வியில் மோகங்கொண்ட மாணவர்கள் நிறைந்ததுமான நகரங்களில் முஸ்லிம் பெண்களின் பர்தாவுக்காக கிளர்ச்சி செய்வது விந்தையிலும் விந்தையே!

## பாகிஸ்தான் (லாகூர்)

நாம் வருத்தத்துடன் ஆப்கானியர்களுடைய பட்டாணிஸ்தான் கோரிக்கையை கண்டிக்கிறோம் ட்யூரான்லயனுக்கு அப்பாலிருக்கும் பட்டாணியர்களைக்கொண்டு பட்டாணிஸ்தான் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை அர்த்தமற்றது. அந்த பிரதேசமும் பாகிஸ்தானின் பிரிக்கமுடியாத ஒரு பாகமாகும். அவர்களுடைய பாஷை, கலாச்சாரம்தனியாக இருப்பினும் பாகிஸ்தானிலிருந்து விலக அவர்களுக்கு ஒருவித உரிமையும் கிடையாது. கோடிக்கணக்கான பாகிஸ்தான் முஸ்லிம்களை அவர்கள் சகோதரர்களாக பாவித்து அவர்கள் நலனில் அக்கறைகொண்டு பட்

## அஞ்சாம் (கராச்சி)

இந்தியாவில் நாஜிஸம் தலைவிரித்தாடுகிறது. இது நீடித்தால் சமீபத்தில் உலக மூன்றாவது யுத்தம் ஏற்பட்டே தான் தீரும். 1938-ல் ஐரோப்பாவில் யுத்தத்துக்காக ஏற்பட்டிருந்த சூழ்நிலையைவிட இந்தியாவில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை குறைந்ததாக மதிப்பிடமுடியாது.

## நிவாயவக்த் (லாகூர்)

1947-ஆகஸ்ட் குழப்ப நிலையில் இருந்ததை விட கோதுமைவிலை இப்பொழுது பன்மடங்கு அதிகரித்துவிட்டது. சில இடங்களில் கோதுமையே கிடைக்கவில்லை. ஜமீன்தார்கள் கோதுமையை மண்டிகளுக்கு அனுப்பாமல் தங்களிடமே பதுக்கி வைத்திருக்கிறார்கள். ஏழைகள் படும் துயரத்திற்கு அளவேயில்லை. மேற்கு பாஞ்சாலத்தில் கூட ரூபாய்க்கு இரண்டு சேர் கோதுமை கிடைப்பது அரிதாக இருக்கிறது. மேற்கு பஞ்சாப் கவர்மெண்டார் கோவாபரேடிவ் ஸ்டோர்களை ஆரம்பித்து இந்த கஷ்டங்களை தீர்க்க வேண்டும்.

## ஷபீனா (லாகூர்)

சென்ற ஏழு வருஷங்களாக பாகிஸ்தான் என்றால் "லாயிலாஹ இல்லல்லாஹு" என்று நம்மிடையே பிரசாரம் செய்யப்பட்டது. நாங்கள் அதற்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்தோம் அளவில்லாத துன்பங்களை சகித்தோம். பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது ஆனால் நாங்கள் ரத்தத்தில் மூழ்கி தன்னைத்தானே துயரத்துக்குள்ளாக்கிக் கொண்டு தன்னுடைய குடும்பங்களை பலிகொடுத்து, குமரிகளை பலிகொடுத்து நீங்கள் பறை சாற்றிவந்த "லாயிலாஹ் இல்லெல்லாஹு" என்ற பாகிஸ்தானுக்கு பதிலாக தாசிகள், பர்தா இல்லாத பெண்கள், சாராயக் கடைகள். சினிமாக்கள், திருட்டுக்கள், காலித்தனம், தலைவிரித்தாடும் நாட்டைப்பார்க்க மனம் வருந்துகிறது. ஆண்டவனை மறந்து திருநபியின் கட்டளைகளை புறக்கணித்து ராப்பகலாக பணத்தைக்கொள்ளையடித்து சுகபோகத்தில் ஊறிக்கிடக்கும் பாகிஸ்தான் லீடர்கள் இங்கும் குழப்பத்தை உண்டாக்கி நாம் இஸ்லாமிய அரசாங்கம் என்று சொல்லக்கூட வசதி

# மௌலானா ஆஸாதிடம் வேண்டுகோள்.

—[ K. M. ஷரீப், குடந்தை ]—

தேசத்தில் பிளவுபட்ட யாதொரு அரசியல் சபையும் இருக்கக்கூடாது என்பது வாஸ்தவம். நாங்கள் லீகை நிலைத்திருக்க விடமாட்டோம். ஆனால் இப்போது பிரேத ஊர்வலம் விமரிசையாக நடைபெறட்டும் என்று பலர் மௌலானாவை வேண்டிக் கொண்டார்கள்

மேற்கொண்டு ஆட்சேபிக்க இடமில்லாததால் இஷ்டப்போல் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது.

லீக் மகாநாடு எப்பொழுது கூடும் என்பது பற்றி கேள்விகள் பிறந்தன. இஸ்மாயில் சாஹிப் அது விஷயத்தில் கராச்சியில் கௌன்ஸில் கூடும் தினத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் நூற்றுக்கணக்கான மைல் தூரத்தில் நடைபெறக் கூடிய கூட்டத்தினரின் கவனத்தை கவர்தல் சாத்தியமற்றிருந்தது. லீகைச் சேர்ந்த ஜில்லாக் கிளை ஸ்தாபனங்கள் பலவந்தமாய் கலைக்கப்பட்டன ஐக்கிய மாகாணம் தன் அசெம்பளி கூட்டத்தை முடித்துக் கொண்டது. பார்லிமெண்டரி லீக் அங்கத்தினர்களையும் எதிர்பார்க்காமல் தன்னைத்தானே கலைத்துக் கொண்டது. இரண்டரை மாதத்திற்குப்பின் அதாவது மார்ச்சு 10-ந்தேதி கௌன்ஸில் கூடியது. அதில் கலந்து கொண்டவர்கள் எங்கெங்கிருந்து வந்தவர்கள் என்பது அதன் தீர்மானங் களிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

லீக் ஸ்தாபனம் நிலைத்திருக்கும். ஸப் கமிட்டி தயாரித்திருக்கும் திட்டப்படி அதன் நோக்கங்கள் பிரத்தியேகமாகவே இருந்து வரும். மதம், விவசாயம், தொழில், கல்வி இவற்றின் அபிவிருத்தியே அடிப்படை. 'பிரத்தியேகம்' என்ற மொழி என்னிடம் பெரும் பயங்கரமானது அரசியல் புரட்சியில் லீக் ஒரு நவீன முறையிம் தோன்றும் என்ற அர்த்தத்தைத்தவிர வேறுவிதமாகச் சொல்லமுடியாது முஸ்லிம்கள் சம்மந்தப்பட்டவரையில், அவர்கள், எத்துறையிலும் அல்லது எந்நோக்கத்துடனும் லீகை நிலைத்திருக்க உடன்பட மாட்டார்கள்.

நெருக்கடியான சமயத்தில் மௌலானா அபுல் கலாம், ஹிப்சுர் ரஹ்மான் அவர்களைத் தவிர சௌத்ரி கலிகுஸ்ஸமான், சுஹார்வர்த்தியைப் போலவே இஸ்மாயில் சாஹிபும் மஹபூப் அலி சாஹிபும் தங்கள் கப்பல்களை காரச்சி துறைமுகத்தில் நங்கூரம் போட்டவர்களாகத் தென்படுவர் என்பது நிச்சயம்.

லீகினால் அநேக தொல்லைகள் உண்டு. அது நிலைத்தால் பழைய சங்கடங்கள் மீண்டும் தலைக்காட்டும்.

மதம், தேசீயம் சம்பந்தமான உரிமைகள் லீக் பொறுப்பில் விடமுடியாது அவற்றை சமாளிக்க மனோஉறுதி, விடாமுயற்சி, களைப்பற்ற சிரத்தை அவசியம். அத்தகைய லக்ஷணங்கள் லீகில் கிடையாது அதிலும் தற்காலை அது கால் ஊன்ற முடியாது. யாதொரு முக்கியப்பிரச்னை முன்வருமாயின்

---

## டான் ( கராச்சி)

இப்பி பக்கிரி பாகிஸ்தானுக்கு விரோதமாக ஒரு பெரிய சதி செய்துவருகிறான். அவன் ஜவஹர்லால் நேருவுக்கு எழுதிய ஒரு ரகசிய கடிதம் கண்டு பிடிக்கப்பட்டது. அவன் முதல்தர பாகிஸ்தான் விரோதி. அதையொட்டி ஏற்பட்ட சூழ்நிலையில் இப்பி பக்கிரி கொல்லப்பட்டதாக ஒரு வதந்தி உலாவிவருகிறது

## பாகிஸ்தான் டைம்ஸ் (லாகூர்)

ஒரு நிருபர்கள் கூட்டத்தில் பாகிஸ்தான் அகதி மந்திரி கஸன்பர் அலி பேசும்பொழுது கடத்தப்பட்ட முஸ்லிம் பெண்களை மீட்டு சிங்கப்பூர், மலேயாவுக்கு அனுப்பப்பட்டது என்று கூறினார். பண்டித ஜவஹர்லால் நேருவையும்- மற்ற ஆபீஸர்களையும் புகழ்ந்து பேசினார். அவர்களுடைய விடா முயற்சியினால் ஏறக்குறைய மூவ்வாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் மீட்கப்பட்டு பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டதென்றும், இந்திய சமஸ்தானங்களிலுள்ள போலீஸ் அதிகாரிகளும், மற்ற ஆபீஸர்களும் பரிபூரணமாய் ஒத்துழைக்காததினால் இன்னும் ஐம்பதினாயிரம் முஸ்லிம் பெண்கள் துயரத்துக்குள்ளாகி வருகின்றார்கள் என்று கூறினார். ஆறாயிரம் முஸ்லிம் அல்லாத பெண்களை நாம் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தோம். இன்னும் கடத்தப்பட்ட ஹிந்து பெண்கள் நாலாயிரத்துக்கு மேல் இங்கு இல்லையென்றும் கூறினார். 1947 ஆகஸ்டுக்கு பிறகு 65 லக்ஷம் முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு வந்ததாகவும் நாற்பது லக்ஷம் ஹிந்துக்கள் இந்தியா போய் சேர்ந்ததாகவும் தெரிவித்தார்.

அது ஆரம்பத்தில் திட்டமொன்றை நிர்ணயித்துவிட்டு ஏதோ சித்திபெற்ற பாவனையில் நழுவிவிடும்.

முஸ்லிம்கள் அரசியல் பிரச்னைகளைப்போல் நாகரீக, தேசீய உரிமைகளை விரும்பார். ஜமீயத்துல் உலமா, ஷியா மகாநாடு இவைகளின் முடிவான திட்டத்தின்கீழ் சகல பொறுப்புகளுடன் அவற்றை விட்டுவிடுவர்.

அந்த நிலையங்கள் சிரத்தையுடன் தம் கடமைகளை நிறைவேற்றும் சமூக சீர்திருத்த விஷயங்களில் பங்கெடுத்துக்கொள்ள கமிட்டியானது வேலைத்திட்டமொன்றை தயாரித்துள்ளது. அஸெம்பிளி லீக் பார்ட்டிகள் அவசியமான மாறுதல்களுடன் அமுல் நடத்திக்கொள்ளவும், தங்களுக்கு இஷ்டப்பட்ட பெயர்களுடன் இதர சங்கங்களுடனும் ஏனைய நபர்களுடனும் சேர்ந்துகொள்ளவும் அனுமதியுண்டு. இத்திட்டம் லீக் திட்டத்தை ஒத்திருக்கிறது

தொழில் திட்ட அமுல் அரசியல் சபைக்கு வெளியில் நடத்துவது உசிதமென்று கௌன்ஸில் சிந்திக்கத் தவறியது. சமூகப் பிளவுகளின் அடிப்படையில் அசெம்பளியில் ஒன்றும் செய்ய முடியாது பார்ட்டிகள் இஷ்டப்பட்ட பெயர்களையும் தேர்ந்தெடுக்கலாம் என்பதாக ஆலோஜனையில் சொல்லப்பட்டிருக்கிறது. லீகின் கௌரவம் தாக்கப்படவேண்டும் என்பதை யொட்டியே இது. அன்றியும் லீக் கலைந்துவிடுமாகில் நாம் என்ன செய்வோம்! ஏற்கனவேயே அனுமதியளித்திருந்தோம் மூழ்கும் படகைத் தள்ளி பிரயோஜனமென்ன? பார்லிமெண்டிலும் இதர மாகாணங்களில் உள்ள லீக் நிலையங்களும் இத்தீர்மானத்திற்கு முன்னரே தங்கள் பொறுப்புக்களை கைவிட்டு ஒதுங்கிக்கொண்டன’’ என்று சொல்வதற்கும் இது சான்றாகும்.

இடையே சமூக நட்பு ஏற்படுத்தவும் ஆலோசனைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது அது விந்தையிலும் விந்தை. பாகிஸ்தான் லீகிலும், லீக் மந்திரிகளுக்குள்ளாகவும் நட்பின் வாஞ்சையே இல்லாதிருக்கையில் இந்திய லீக் அதை அடைவதென்றால் முடியாத காரியம் பாகிஸ்தானில் லியாகத் அலி முஸ்லிம் எஸ்டேட், முஸ்லிம் பாஷை என்ற கூக்குரலை விட்டுவிடவேண்டும். இல்லையேல் இஸ்மாயில் சாஹிப் முதலியவர்களும் உண்மையாளர்களென்று நம்பமுடியாது. இந்தியப் பிரிவு கோஷ்டிகளுக்கு அவர்களால் ஆதரவு கிடைக்குமென்றும் இந்து சமூகப் பிளவு பலமடையுமென்றும் அவர்கள் நம்பியிருப்பதாகப் பொருட்படும். ஆனால் முஸ்லிம் மஹாஜனங்கள் ஏற்கனவேயுள்ள விபத்தைப்போன்ற விபத்திற்கு ஆளாக இப்போது தயாரில்லை.

சுருங்கச் சொல்லின் அசெம்பிளியில் உள்ள லீக் அங்கத்தினர்கள் யாவரும் தங்கள் நிலைமைகளை நன்கு ஆராய்ந்தறிய வேண்டும் என்று சொல்லல் பொருந்தும் அவர்களுக்கு உள்ளன்பும் மனோ திடகாத்திரம் சிறிதளவேனும் இருக்குமாயின் அவர்கள் தங்களுக்குப் பின் தயங்கி நிற்கும் நிலை தடுமாறிய ஜனத்திரளை திரும்பிப் பார்க்கவேண்டும். அவர்களை ஏதேனும் ஒரு வழியில் அமர்த்தவேண்டும்.

## முஸ்லிம்களின் மனமாறுதல்

“லைசென்ஸ் ரத்தாகி விட்டது. துப்பாக்கியை ஒப்படைத்து விட்டேன். என்னிடம் துப்பாக்கி இருந்தாலும் இந்தியாவைக் கண்ணெடுத்துப் பார்க்கும் எந்த சக்தியையும் எதிர்த்து தாய்நாட்டின் கவுரவத்தைக் காக்க அதை உபயோகிக்கத் தயங்கமாட்டேன்” என்று சென்னையைச் சேர்ந்த நண்பர் சதக்தம்பி மரைக்காயர் உணர்ச்சியுடன் பேசினர். அவர் பக்கா லீக் வாதியாயிருந்தவர்தான். ஆயினும் மேற்கூறிய வார்த்தைகள் உச்சரிப்பதில் அவர் காட்டிய ஆர்வத்தைப் பார்த்த எவரும் அவருடைய அந்தரங்க சுத்தியை சந்தேகிக்க முடியாது. வெள்ளையர்கள் வெளியேறிய பிறகு இந்திய முஸல்மான்களிடையே ஏற்பட்டு வரும் தேச பக்தியைப்பார்த்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியா மீது படையெடுத்து வந்த மஹ்மூத் பாபர், ஹுமாயூன். நாதிர், அஹ்மத்ஷா அப்தாலி போன்ற முஸ்லிம படையெடுப்பாளர்களை அறுநூறு வருஷங்கள்வரை ஹிந்து முஸ்லிம்கள் சேர்ந்து எதிர்த்துவந்திருப்பதாக சரித்திரம் சொல்லுகிறது. வெள்ளையன் காலடி வைத்தான். இருவரையும் பிரித்தான். இன்று வெள்ளையன் வெளியேறிவிட்டான். பிரிந்தவர்கள் ஒன்றுபடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்தியாவுக்காக தங்கள் கடைசி சொட்டு ரத்தமும் முஸ்லிம்கள் சிந்துவார்கள். —ஆசிரியர்.

## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

# கடிதங்கள்.

## பன்ருட்டி.

பன்ருட்டி. 8—7—48.

இந்நகரில் ஷாப் சட்டம் அமுலுக்கு வந்து ஒரு மாதகாலமாக நடந்துவந்தது. பலர் சட்டத்தை மீறி நடந்துவந்தார்கள். பலமுறை பார்த்தும் பலனளிக்கவில்லை. ஆகவே தி சோஷலிஸ்ட் பார்ட்டி (இந்தியா) பன்ருட்டி டவுன்யூனிட் சார்பாக 7-7-48 காலை 9-30 மணிக்கு ஷாப் ஆக்ட் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு ரிபோர்ட் செய்யப்பட்டது அதன்படி மாலை 2-மணிக்கு கடைவீதியை பார்வையிட்டு ஐந்து மளிகைக்கடைகளும், ஒரு ஜவுளிக்கடையும் பதிவு செய்து இருக்கின்றது இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

V. முத்து வேலு.

○ ○ ○

## சித்திலிங்கமடம்

6—7—48 பிற்பகல் 2-மணிக்கு திருக்கோவிலூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகஸ்தர்கள் தேர்தல் தென்னாற்காடு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்கள் தலைமையில் நடந்தது ஸ்ரீ S A. M. அண்ணாமலை தலைவராகவும், ஸ்ரீ M ராஜமாணிக்கம் உபதலைவராகவும், ஸ்ரீ R. நடராஜன் காரியதரிசியாகவும், ஸ்ரீ T. S P ஷண்முகம் உப காரியதரிசியாகவும், S N. வீராசாமி பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

R நடராஜன்'
காரியதரிசி, தா-கா கமிட்டி

○ ○ ○

## I N. A. ரிலீப் கமிட்டி,

### அதிராம்பட்டணம்

29—6—48உ இவ்வூர் காங்கிரஸ் மைதானத்தில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஜனாப் S. S. இபுராஹிம் தலைமையில் I. N. A-க்கள் அடங்கிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் தேசீயக்கொடி ஏற்றினர். I. N. A. வீரர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. அதன்பின் ஸ்ரீ R. முத்துவேலு, ஸ்ரீ M. சின்னசாமி ஸ்ரீ R. வரதராஜலு, I. N. A. வீரர் ஜனாப் M E. கமால் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். பட்டுக்கோட்டை தாலுக்காவில் உள்ள I. N. A. வீரர்களின் நலனைக் கவனிக்க கீழ்கண்ட கமிட்டி அமைக்கப்பட்டது.

தலைவர் ஸ்ரீ S. S. இபுராஹிம்
உபதலைவர் ஸ்ரீ M. சின்னசாமி பிள்ளை
கௌரவ காரியதரிசி ஸ்ரீ M. E. கமால் I. N. A.
ஸ்ரீ R. முத்துவேலு
ஸ்ரீ S. E. ஹமீத்கான் I. N. A.
பொக்கிஷதார் ஸ்ரீ R, வரதராஜலு
பிரசார காரியதரிசி ஸ்ரீ T. காதர் சாயபு I.N.A.

வெல்பேர் ஆபீஸர் ஸ்ரீ. M. சின்னைய பிள்ளை (கமிட்டிக்கு) அங்கத்தினர்களைச் சேர்க்க அதிகாரம் அளிக்கப்பட்டது.

இங்ஙனம்,
M. E. கமால்,
காரியதரிசி.

அதிராம்பட்டணம், 1—7—48

○ ○ ○

## நெல்லை தேர்தல்

திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் ஸ்தான இடைத் தேர்தலுக்கு ஒரு லீக் அபேட்சகரை எதிர்த்து இரண்டு காங்கிரஸ் தேசீய முஸ்லிம் அபேட்சகர்கள் (ஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிம் உள்பட) நின்ருர்கள். ஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிம் மற்ருெரு தேசீய முஸ்லிமுக்காக தன்னுடைய அபேட்சையை முதலில் வாபஸ் பெற்றுக்கொண்டார். ஆனல் நகர காங்கிரஸ் கமிட்டி உண்மையான தேசீய முஸ்லிமான ஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிமை தேர்ந்தெடுக்கும்படி பொது ஜனங்களை நோட்டீஸ்கள் மூலமாகக்கேட்டுக்கொண்டது. ஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிம் வோட்டுக்களைப் பெறுவதற்குத் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டாலும் பெருவாரியான வோட்டர்கள் தங்கள் வோட்டுகளை அவருக்கு கொடுத்திருப்பார்கள் என்று நம்புகிருேம்.

மேலப்பாளையம் டவுன் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஜனாப் காதர் முஹைதீன் சாஹிப் உண்மையான காங்கிரஸ் தேசீய முஸ்லிமான V. S. T. முஹம்மது இப்ராஹிம் அவர்களுக்கு தங்களுடைய மேலான வாக்குரிமைகளை அளித்த எல்லா வாக்காளர்களுக்கும் தன்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிருர்.

—(தந்தி - 9—7—48)

# தமிழ் நாட்டிலும் ஹிந்தி கட்டாய பாடம்.

தமிழ்நாடு ஹிந்தி பிரசார சபைத் தலைவர் அ. வேதரத்தினம் எழுதுகிறார்.

சென்னை நகர உயர்தரப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டில் நம் கல்வி மந்திரி பேசுகையில் ஆந்திர, கேரள, கர்நாடக மாகாணங்களைப் போல் நம் தமிழ் நாட்டிலும் ஹிந்தி கட்டாய பாடமாக்கப் படுமென்று கூறியிருப்பதை முழுமனதுடன் வரவேற்கிறோம். நம் தேசிய பொதுபாஷையாகிய ஹிந்துஸ்தானி விஷயத்தில் நம் தமிழ் நாட்டை மாத்திரம் ஓர் கேவலமான தர்ம சங்கட நிலைமையில் வைத்ததை இதன்மூலம் கல்வி மந்திரி நிவர்த்தி செய்துவிட்டார்.

தமிழ் மக்களும், பத்திரிகாசிரியர்களும் தேசிய மொழி விஷயத்தில் தமிழ் நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதியையும், அவமானத்தையும் இவ்வளவு குறுகிய காலத்தில் அரசாங்கம் உணர்ந்து தனது தவறை திருத்திக்கொள்ளும்படி வெளியிட்ட அன்புணர்ச்சி மிகவும் போற்றற்குரியது.

எதிர்கால இந்தியாவின் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை வகுத்துச் சென்ற காந்தி மகான் செய்த பல தொண்டுகளிலும் கல்விக்காகச் செய்த சேவையே எல்லாவற்றிலும் தலை சிறந்தது.

நாட்டில் அமைதி தரும் முன்னேற்றத்திற்கும் ஜீவாதாரப் பொருள்களில் உற்பத்தி பெருக்குக்கு சிறந்ததும் மேல் நாட்டுக் கல்வி நிபுணர்களும் போற்றுவதுமான ஆதாரக் கல்வித் திட்டத்தை நமக்கு வகுத்துத் தந்தருளியிருக்கிறார். அம்மகான் அத்திட்டத்தில் ஹிந்துஸ்தானி தேசிய பாஷையாக்கப்பட்டு அதற்குள் திறமான ஓர் இடமும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாதாரக் கல்வியையே நம் மாகாணத்தின் எதிர்காலக் கல்வித் திட்டமாக ஏற்றுக்கொண்ட நம் சென்னை அரசாங்கம் தனது கல்விக்கொள்கையில் உறுதியான மார்க்கத்தைக் கடைப்பிடிக்காமல் இவ்வளவு சலனம் வேண்டியதே இல்லையே "தாய் மொழியில் உயர்தரக் கல்வி" என்பன பற்றி திருச்சி ரேடியோவில் கல்விமந்திரி பேசுகையில், மேல்நாட்டார் உயர்தரக் கல்வியை வீட்டிலிருந்தே படிப்பதுபற்றிக் கூறியதை நம் மாகாணத்தில் அனுஷ்டானத்திற்கு கொண்டு வரலாகாதா? இதற்கு சர்வகலாசாலை செனட் சிண்டிகேட் இவை தடையாக இருந்தால் இத்தடையைப் போக்க அரசாங்கத்தால் இயலாதா? இந்தியாவின் இதர பல மாகாணங்களில் மாணவர் வீட்டில் படித்து பரீக்ஷைக்கு ஆஜராகும் முறை அமுலில் இருக்கும்போது நம் மாகாணத்திற்கு மட்டும் இம்முறை எம்முறையில் பொருந்தவில்லை என்பது நமக்கு விளங்கவில்லை, கல்வி மந்திரியால் பாராட்டப்பட்ட இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர பள்ளிகளில் இடமின்றி மாணவர் தவிக்கும் இக்காலத்தைவிடச் சிறந்த காலம் வேறில்லை என்பதைக் கவனித்து தக்கது செய்ய முன்வருவார்களாக.

9—7—48. அ. வேதரத்னம்.

---

## பண்ருட்டி.

மகா-௱-ஸ்ரீ "ஆஸாத்" ஆசிரியர் அவர்களுக்கு பண்ருட்டி S. பேம்சந்த் எழுதியது:—

28—6—48 மாலை 7-மணிக்கு பண்ருட்டி நேத்தாஜி மைதானத்தில் விழாக் கமிட்டி சார்பில் ஷை கமிட்டி தலைவர் V. வெங்கடாஜல ஆச்சாரி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு விகடகவி கதிர்வேல் பிள்ளை, K. சுப்பராயலு நாயுடு, து. கோவிந்தசாமி பிள்ளை, பா. வை. முத்துகுமாரசாமி ஆச்சாரி இவர்கள் முறையே ராஜாஜியின் சேவைகளைப் பாராட்டியும் அவர் தலைமையில் நாட்டில் சமாதானம் நிலவி பாரதநாடு ஒன்றுபட்டு விளங்குமென்றும் தவறுதல் செய்பவர்களுக்கு தண்டனை கிடைக்குமென்றும் பிற கக்ஷிக்காரர்கள் கக்ஷிக்கொள்கையைமட்டும் பிரசாரம் செய்யவேண்டும் வீணான துஷ்பிரசாரம் செய்தல் கூடாதென்றும் விரிவாகப் பேசினார்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

இப்படிக்கு,

1—7—48 A. S. PEMCHAND.

---

## கதர்

நசித்துப்போன நம் நாட்டு கைத்தொழில் புத்துயிர் பெறவேண்டுமானால், ஏழைகளின் இன்னல் தீரவேண்டுமானால், சோம்பியிருக்கும் விவசாயிகளுக்கு வேலை வேண்டுமானால், துணி உற்பத்தி பெருக வேண்டுமானால், உடைப் பஞ்சம் தீரவேண்டுமானால் கதரை அணியுங்கள்.

இக. முகம்மது இஸ்மாயில்

# பாகிஸ்தானின் சுயரூபம்.

# பிரிவினைக் கிளர்ச்சியும், பிரிட்டிஷாரின் சூழ்ச்சியும்

எங்கும் பாகிஸ்தான் என்பதே பேச்சு. பொது தேர்தல்களில் கூட பாகிஸ்தான் பெயரால் ஓட்டுக் கேழ்க்கும் அளவுக்கு இந்தப் பிரச்னை முற்றிவிட்டது இந்திய முஸல்மான்களின் இன்னல்களை அகற்றவல்ல உன்னத வழி. முஸ்லிம்களின் முற்போக்குக் கேற்ப தோர் மூப்பு என்றெல்லாம் லீக் தலைவர்கள் பாகிஸ்தானைப் புகழ்ந்து பேசி வருகின்றனர். பத்திரிகைகளிலே பத்தி பத்தியாக அதனுடைய சாதகங்களின் வர்ணனைகள். பொது மேடைகளிலே காரசாரமான சொற்பொழிவுகள் ஆவேசமூட்டும் அறிக்கைகள் கவர்ச்சிமிகுந்த கோஷங்கள் நேரடி நடவடிக்கைகள் எல்லாம் பாகிஸ்தானைக் குறித்துத்தான். இந்த சூழ்நிலையில் நாம் மட்டிலும் சும்மாயிருக்க எப்படி முடியும்? பாகிஸ்தானைப் பரிசீலித்தோம். பக்ஷபாத மற்ற பரிசீலனை. கட்சி மனப்பான்மையின்றி கவனமாய் ஆராய்ந்தோம். இந்தத்திட்டம் முஸ்லிம் மெஜாரிடி மாகாணங்களுக்கும் சரி, மைனரிடி மாகாணங்களுக்கும் சரி உகந்ததல்ல என்பதுதான் நாம் கண்ட உண்மை. இந்திய முஸல்மான்களின் எதிர்கால வாழ்வுக்கு ஆதாரம் என்று சொல்லப்படுவதின் அர்த்தம் நமக்குப் புலப்படவில்லை. நம்முடைய ஆராய்ச்சியின் பலனை கீழே விவரிக்கின்றோம். கக்ஷி மனப்பான்மையைக் களைந்து களங்கமற்ற மனதுடன் படிக்கவேண்டுமென வாசகர்களை வேண்டுகிறோம். உணர்ச்சி வசப்பட்டு உண்மைகளை உதாசீனம்செய்வது அபாயகரமானதாகும். திட்டத்தைக் குறித்து சர்ச்சை செய்வதற்குமுன் அதனுடையபிறப்பிடத்தை அறிய வேண்டியது அவசியமாகும். அதைப்பற்றிய சில விஷயங்களை நேயர்களுக்கு அறிவித்தபிறகு திட்டத்தை குறித்த சர்ச்சையை துடங்குவோம்.

### இன்றைய உலகத்தில் அரசாங்கங்களின் அஸ்திவாரம்.

குடியரசுகளும், சாம்ராஜ்யங்களும் அரசியலையும் அதிகாரத்தையும் விட பொருளாதாரத்திற்கும் அதன் உபகரணங்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. வர்த்தக வசதிகள், தொழிலபிவிருத்திக்கான சாதனங்கள் பிரதானமான விஷயங்களாகும். மூலப்பொருள்களின் அளவும் அவற்றின் தாராதமும்

### ஐரோப்பியர்கள் இங்குவந்ததுஎதற்கு?

மேற்கூறிய வசதிகள் ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் நிறைய உண்டு. மேல் நாட்டாரின் கவனத்தை அவை கவர்ந்தன. இந்த வசதிகளை அடையும் ஆசையுடன் அவர்கள் இங்கு வந்தார்கள். சமீபத்திலே நிகழ்ந்த உலக மஹா யுத்தங்களுக்கு காரணமும் இந்தப் பேராசை ஒன்றேதான்.

### அண்டிப்பிழைத்தவர்கள் — — ஆக்ரமித்தனர்,

ஆரம்பத்தில் இவர்கள் வர்த்தக வேஷத்தில் வந்தனர். 1600-முதல் 1700-வரையில் இந்தியாவின் பாகங்களில் சுற்றி அலைந்து வியாபாரம் செய்துவந்தனர் அதன் பிறகு இவ்வாறு அலைந்துகொண்டிருந்த நூற்றுக்கு மேற்படாத வெள்ளை பனியாக்கள் ஒன்று கூடி ஈஸ்ட் இந்தியா கம்பெனி என்ற பெயருடன் ஒரு கம்பெனியை ஸ்தாபித்தார்கள். பலவித உபாயங்களைச் கையாண்டு நவாபுகளையும், ராஜாக்களையும் அணுகினார்கள். அனுமதி பெற்று சமுத்திரக்கரையின் பல இடங்களில் கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டனர். நயவஞ்சகமாய் இந்திய அரசர்களிடம் வியாபார சலுகைகளைப் பெற்றனர். நாளாவட்டத்தில் நியாயமற்ற சட்டங்களையும் இயற்றினர். வில்லியம் டிக்பி என்ற ஒரு ஆங்கிலப் பிரமுகர் கூறியுள்ளபடி "முடிவில் ஆங்கிலேயர்கள் பஹிரங்கமாக இந்தியாவின் மேல் வியாபார ஆதிக்கம் அடைந்தே விட்டனர்."

### ப்ளாஸி யுத்தத்திற்குப் பின் நடந்த பகற் கொள்ளை.

இவ்விதம் 1700 முதல் 1757 வரை இந்தியா வர்த்தகச் சுரண்டலுக்கு இலக்காகி கேவல நிலைமையை அடைந்துவிட்டது. 1757-ல் ப்ளாஸி யுத்தம் நடந்தது. இந்த சுரண்டல் பேர்வழிகள் ரத்த வெறியர்களாக மாறி தங்கள் பலாத்கார அரசியல் ஆதிக்கத்தை நிலை நாட்டியே விட்டார்கள். இந்திய செல்வங்களும் பொற்களஞ்சியங்களும் இங்கிலாந்துக்குப்போக ஆரம்பித்தன. வர்த்தகச் சுரண்டலும் பலாத்கார ஆட்சியும் தான்தோன்றித்தனமாக

பெருக்கெடுத்து இங்கிலாந்துக்கு ஓடியகாலம். லார்ட் மெகாலே ஒப்புக்கொண்டபடி இந்திய செல்வத்தின் பெரும்பாகம் அந்தக்காலத்திலேதான் இங்கிலாந்துக்கு கொண்டு போகப்பட்டது 1757 முதல் 1832 வரை ஈவிரக்கமற்ற முறையில் இந்தியா கொள்ளையடிக்கப்பட்டு வந்தது

## பழைய சுரண்டலுக்கு புதிய மெருகு

அதன் பிறகு கம்பெனி ஆட்சி அரசாட்சியாக மாறியது. இனிமையாகப் பேசுவதுபோலப் பேசி நேர்மையுள்ளவர்களைப்போல் நடித்து தங்களுடைய நலன்களுக்காக இந்தியாவை பலியிட்டு தங்கள் காரியத்தை சாதித்துக்கொண்டார்கள். இதை வில்லியப் டிக்பியின் கீழ்வரும் வாக்கியங்கள் வெகு அழகாக வர்ணிக்கின்றன.

“ஆயினும் என்ன! இதற்கு முன் என்றுமே கொள்ளையடிக்கப் படாத கேவலமான முறைகளால் இன்றைக்கும் இந்தியா கொள்ளையடிக்கப்படுகிறது. நம்முடைய ஆட்சியின் மெல்லிய சாட்டை இன்று கனமான இரும்புச்சங்கிலியாக மாறிவிட்டது. ஒரு நாட்டு மக்களின் உயிர்களை பலியிட்டு இன்னொரு நாட்டை செழிப்புறச் செய்யும் இந்தக் கொள்ளைக்கு க்ளைவும் ஹேஸ்டிங்ஸும் அடித்த பகற் கொள்ளையும் நிகரில்லை”

தங்கள் தொழில்களை வளர்க்க இந்தியத்தொழிலை சிதைத்தார்கள். மூலப்பொருள்களை ஆக்கிரமித்து இந்திய உற்பத்தியை தடுத்தார்கள் இந்திய வியாபாரத்தைக் குழிதோண்டிப் புதைத்தார்கள். சகிக்க முடியாத வரிகளை விதித்து விவசாயத்தைப் பாழாக்கினார்கள். இந்திய தயாரிப்பு இங்கிலாந்தில் இறக்குமதியாகாமல் தடுக்கும் பொருட்டு தாங்கமுடியாத சுங்க வரிகளைப் போட்டார்கள். இந்திய தொழிலாளிகளை பொருளாதார நெருக்கடிக்குள்ளாக்கி துன்புறுத்தியதன் காரணமாக தொழிலாளிகள் தொழிலை விட்டனர். இவ்விதம் உற்பத்தியைக் குறைத்து ஏற்றுமதியை தடுத்து விட்டார்கள்.

அதேசமயத்தில் நிபந்தனையற்ற வியாபாரத்தின் பல்லவியைப்பாடிக் கொண்டு அல்லது குறைந்த பக்ஷ சுங்கவரியின் மூலமாகவும் பிரிட்டிஷ் தயாரிப்பைக்கொண்டு இந்திய மார்க்கெட்டுகளை நிரப்பினார்கள். இவ்விதமாக பொருளாதாரத்தில் நசித்துப் போயிருந்த இந்தியமக்கள் சாதாரண அகவிலை ஏற்றதாலும் பட்டினி கிடக்க நேர்ந்தது. இதனால் 1800 முதல் 1900 வரையில் முப்பத்தொன்பது பெரிய பஞ்சங்கள் ஏற்பட்டன. நாலரைகோடி

இந்திய மார்க்கெட்டுகளில் எங்கு பார்த்தாலும் சீமை சாமான்கள் தென்பட்டன. இங்கிலாந்திலிருந்த விவசாயிகள் தொழிலாளிகளாகவும், முதலாளிகளாகவும், கோடிஸ்வரர்களாகவும் ஆயினர். இங்கிலாந்தின் மொத்த உற்பத்தியில் 100 க்கு 64 பங்கு இந்தியாவில் இறக்குமதியாக ஆரம்பித்தது துணி. நூல் இவ்விரண்டிற்கு மாத்திரம் 1928 ல் இந்தியாவின் பணம் எண்பது கோடி ரூபாய்க்குமேல் இங்கிலாந்துக்கு போயிருக்கிறது. சுருங்கச்சொன்னால் உலகம் பூராவிலும் பெரிய மார்க்கெட்டாக இருக்கும் இந்தஉபகண்டம் பிரிட்டிஷாரின்சுகபோகங்களுக்கும் ஆடம்பரங்களுக்கும் ஆதாரமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆசைக் கண்களை அகலவிரித்து இந்தியாவை ஜெர்மனியும், ஜப்பானும் பார்க்க முற்பட்டது தான் உலக மஹாயுத்தத்தின் ஜ்வாலை கிளப்பியதற்கு முக்கிய காரணமாகும். இந்திய வர்த்தகமும் தொழிலும் சிதைக்கப்பட்ட நீண்டதொரு சோகக் கதையின் சுருக்கம் இது.

## உத்தியோகச் சுரண்டல்

இந்தியப் பணத்தை இங்கிலாந்துக்கு கொண்டு போக ஆங்கிலேயர்கள் கையாண்ட உபாயங்களில் உயர்தர உத்தியோகங்களும் ஒன்று. வெள்ளையர்கள் வகிக்க சம்மதித்த சகல உயர்தர உத்தியோகங்களும், நிர்வகிக்க முன் வந்த அரசாங்கத்தின் எல்லா முக்கிய இலாக்காக்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. உலகம் பூராவிலும் உள்ள செல்வம் மிகுந்த நாடுகளிலும் கூட அதிகாரிகளுக்கு கொடுக்கப்படாத அளவு பெருந்தொகைகள் இந்த வெள்ளை அதிகாரிகளுக்கு சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. ராணுவத்திலுள்ள பெரிய உத்தியோகங்கள் அறவே இந்தியர்களுக்கு மறுக்கப்பட்டன அமெரிக்கா, இங்கிலாந்து ஜப்பான், ஜெர்மனி முதலிய நாடுகளிலும் இல்லாத உயர்ந்த சம்பளங்கள் இந்தியாவில் சிறிது காலம் உத்தியோகம் பார்த்த வெள்ளையர்களுக்கு இந்தியப் பணத்திலிருந்து அளிக்கப்பட்டன. இந்திய பணத்திலிருந்து ஒரு வெள்ளை சிப்பாய்க்கு சிலவு செய்யப்படும் தொகை நான்கு அல்லது ஐந்து இந்திய சிப்பாயின் சிலவுக்கு சமமாக இருக்கின்றது. 1919 ல் காமன்ஸ் சபையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது ஒரு இந்திய சிப்பாயின் வருஷச் சிலவு 411 ரூபாய் என்றும் ஒரு வெள்ளை சிப்பாயின் வருஷ சிலவு 1971 ரூபாய் என்றும் மிஸ்டர் மாண்டேக் வெளியிட்டார் இம்மாதிரியான மலை முழுங்கி சோல்ஜர்கள் இந்திய பாதுகாப்பின் பெயரால் குறைந்த பக்ஷம் ஐம்பது அல்லது அறுபது ஆயிரம் பேராவது இந்தியாவில் இருக்க வேண்டியது அவசியம் என்று தீர்மானிக்

(தொடரும்)

# மௌலானா அபுல் கலாம் ஆஸாத்

## 1913-ல் எழுதியது.

ஹஜரத் நூஹ் தீர்க்கதரிசியின் சரித்திரம் குரானில் வரையப்பட்டிருக்கிறது அவர் ஆயுள்முழுதும் சத்தியப் பிரசாரம் செய்த அச்சரித்திரத்தின் மூலமாய் நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகளாவன:—

ஆண்டவனை மறந்து அவனின் சட்ட திட்டங்கள் அவமதிக்கப்பட்டு, அநியாயம், துர்க்கிர்த்தியம் முதலியவைகள் உலகத்தைச் சூழ்ந்துகொண்டு கல்வி யென்பதே ஞானத்தை மறைக்கக் கூடியதாயும் நாகரீக மென்பதே வழி கெடுப்பதாயு மேற்பட்டு விட்டகாலத்தில் சத்தியப் பிரசாரஞ் செய்வது உண்மையான மனிதர்களின் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற முடியாமல் தடுப்பதற்கு எத்துணை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும், பிரசங்கம் புரியும் நாவை யடக்குவதற்குக் கொடிய சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பினும், எழுதுகோலின் சுதந்திரத்தைப் பறித்துக் கொள்வதற்காகப் பற்பல ஆக்டுகளை நிறைவேற்றினும், இவ்விடையூறுகளின் மூலமாய் எப்படிப்பட்ட கஷ்டங்களை யனுபவிக்க நேரிடினும் உண்மை முஸ்லிம்கள் மௌனம் சாதிக்கக் கூடாது. அசத்தியத்தை எதிர்த்து பிரசாரம் புரிவதற்கு பஹிரங்கமாக வெளிக்கிளம்பவேண்டும்

சத்தியப்பிரசாரம் புரிவதற்காக முற்படுகிறவர்கள் தங்களின் கடமையை நிறைவேற்றும் போது தங்களுக்குப் பெருங்கீர்த்தி ஏற்பட வேண்டுமென்ற சிந்தனையிருக்கக்கூடாது. அதிகார வர்க்கத்தாரின் தோற்றத்தில் படும்படி தங்களுக்குக் கீர்த்தியைச் சம்பாதித்துக்கொண்டு, பிறகு வேலை செய்யலாமென சத்தியப் பிரசாரர்கள் எண்ணக்கூடாது. இவ்வெண்ணம் உபயோகமற்றதும் குற்றமுள்ளதுமாகும். சத்தியப்பிரசாரர்களின் நிலைமை பலஹீனமானதென்று கூறப்படும். இவர்கள் அவமதிக்கவும் படுவார்கள். பாதகர்கள் இவர்களைப் பரிகாசமும் செய்வார்கள். இவர்கள்பொய்யர்களென்றும், வீணர்களென்றும், பிழைப்பற்றவர்களென்றும், பொல்லாதவர்களென்றும் அறிவிக்கப்படுவார்கள். ஆயினும் உத்தமர்களான சத்தியப்பிரசாரர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்றியே தீருவார்கள்.

சத்தியப் பிரசாரர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருக்கமாட்டார்கள். சில சாதாரண பொது மக்களே சத்தியப் பிரசாரர்களின் துணையாளர்களாகவிருப்பார்கள். இவர்களும் பார்ப்பவர்களுக்கு கேவலமாக தோன்றுவார்கள். இவர்கள் அநியாயக்காரர்களுக்கு சந்தா கொடுத்தவர்களாயும், அவர்களின் தாக்ஷண்யத்தை விரும்பி செய்யக் கூடாதவைகளை செய்தவர்களாயும், வெருந்தீர்மானங்களை நிறைவேற்றினவர்களாயு மிருக்கமாட்டார்கள். சதி, மோசம், சூழ்ச்சி முதலியவைகளால் இவர்கள் தங்களின் சக்திகளை அபிவிர்த்தி செய்துகொள்ள மாட்டார்கள். சத்தியமாயும், பஹிரங்கமாயும், சாதாரணமாயும் வேலை செய்வார்கள்.

சத்தியப் பிரசாரர்கள் களங்கமற்ற ஹிருதயங்களையுடையவராக விருக்கவேண்டும். இவர்களின் வார்த்தைகள் தூய்மையானதாயும், தொனி கொடூரமாயும் வேகமாயுமிருக்க வேண்டியதவசியமாகும். பலாத்காரத்தால் எவரையும் கட்டாயப்படுத்துவது சத்தியப் பிரசாரர்களுக்கழகல்ல.

சத்தியப் பிரசாரம் பொருள் சேகரிப்பதற்குரிய தொழிலல்ல. சத்தியப் பிரசாரமென்ற பெயரைப் பூண்டு பெரும் உத்தியோகங்களைச் சம்பாதிக்கமுடியாது. சத்தியப்பிரசாரத்தால் ஐஸ்வரியம் பெருகிவிடமாட்டாது. சத்தியப் பிரசாரத்திற்குக் கூலி கொடுக்க கடவுளைத்தவிர வேறுயாருமில்லை. சத்தியப் பிரசாரத்திற்குக் கூலியைப் பெற வேண்டுமானால் ஆண்டவனின் சமூகத்திலேயே கேட்டுக்கொள்ள வேண்டும்.

சத்தியப் பிரசாரர்களின் துணையாளர்களை அவர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று கூறி நிர்ப்பந்திக்கப் படுமாயின், துணையாளர்கள் இதைப் பொருட் பண்ணக்கூடாது.

சத்தியப் பிரசாரர்களிடத்தில் கடவுளால் அளிக்கப்பட்ட தங்கம், வெள்ளிக் கூவியல்களுள்ள பொக்கிஷ மிருக்கமாட்டாது. சத்தியப் பிரசாரர்கள் தேவதைகளல்ல. இவர்கள் ஜோதிடர்களுமல்ல ஆருடமறிந்தவர்களுமல்ல. இவர்கள் சாதாரண பொது மக்களாகவே யிருப்பார்கள். ஆயினும் இதே ஸ்திதியிலிருந்துகொண்டு அநேக அநியாயக்கார அரசர்களை அழிப்பதற்கு இறுதிக்கடிதங்களை யனுப்பிவிடுவார்கள்.

சத்தியப் பிரசாரர்கள் தங்களின் வேலையைச் செய்வதற்கு சந்தர்ப்பம் இடம் முதலியவைகளைத் தேடிக்கொண்டிருப்பது எப்பலனையும் அளிக்கமாட்

டாது. எதேச்சாதிகாரம் பெற்ற எதிரிகளை எச்சந்தர்ப்பத்தில் கண்டபோதிலும் சத்தியப்பிரசாரர்கள் உடனே தங்களின் வேலையை ஆரம்பித்துவிட வேண்டும். வசந்தகாலத்தை எதிர்பார்த்து நேரத்தை வியர்த்தமாக்காமல், எந்நிலைமையிலும் சதா வேலை செய்கிறவர்களாகவே யிருக்கவேண்டும். சத்தியப் பிரசாரர்களின் வேலையைக்காண்பவர்கள் நடுங்க வேண்டும். இவர்களின் சேவையைச் செவிகளாற் கேட்பவருங்கூட கஷ்டத்திற் குள்ளாகிவிட வேண்டும்.

சத்தியப்பிரசாரர்கள் அபஜெயமடைவதாயினும் சரி, எதாச்சாதிகாரத்தில் எவ்வித மாறுதலுமேற்படா விடினுஞ்சரி, சத்தியப்பிரசாரர்களின் ஊழியத்தில் வித்தியாசமேற்படக்கூடாது. அநியாயக்கார கோஷ்டியார் சத்தியப் பிரசாரர்களை நோக்கி "நாங்கள் ஆயுதபலத்தால் ஜெயித்தோம், இதை ஆயுதபலத்தாலேயே நிலைநிருத்துவோம்" என்று கூறுவார்களாயின் அவர்களுக்குச் சத்திய பிரசாரர்களளிக்க வேண்டிய விடை, "நீங்கள் அழிந்து போவதும் ஜீவித்திருப்பதும் தெய்வ சம்மதத்தைப் பொருத்ததாக இருப்பதால் இதில் எங்களுக்கு எவ்வித சம்மதமுமில்லை" என்பதே.

சத்தியப் பிரசாரர்களின் வேலையைக்கண்டு சந்தேகப்படுவார்கள் இவர்கள் வெரும் வாக்குச் சமர்த்தர்களெனக் கூறுவார்கள் ஆயினும் சத்தியப் பிரசாரம் சம்பந்தமான வேலையில் தளர்ச்சி ஏற்படக் கூடாது அன்றியும் தங்களுடைய லக்ஷியம் இன்னதுதான் என்பதைப் பஹிரங்கப்படுத்தி விடவேண்டும்.

"எதேச்சாதிகாரத்தின் பீரங்கியையும் அசத்தியத்தின் வாளாயுதத்தையுங் கண்டு நடுங்கிப் போனவர்கள் உண்மையை மதித்துத் தங்கள் கடமையைச் செய்ய மாட்டார்களாயின் இவர்களை சத்தியப் பிரசாரர்கள் பஹிஷ்காரஞ் செய்ய வேண்டும். இப்பேடிகள் அநியாயத்தைப் பூஜிப்பவர்களாகி விட்டதால், இவர்களும் அநியாயக்காரர்களே. இவர்களை கடவுளின் கோபமாகியவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விடும். இவர்களைப்பற்றி சத்தியப் பிரசாரர்கள் வார்த்தையாடிக் கொண்டிராமல் தங்களைக் காப்பாற்றிக் கொள்வுதற்காகச் சிந்திக்கவேண்டும். அவ்வெள்ளம் தங்களையு மடித்துக்கொண்டு போகா வண்ணங் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு கப்பலைத்தயாரிக்க வேண்டும்.

சத்தியப்பிரசாரர்கள் மும்முரமாய்க் கப்பல் கட்டுவதைக் கண்டு ஞானமில்லாதவர்கள் சிரிப்பார்கள். ஆயினும் சத்தியப் பிரசாரர்கள் தங்கள் வேலையை மட்டுமே கவனிக்கவேண்டும்.

சத்தியப் பிரசாரர்கள் தங்களை மட்டுமின்றி, ஆண்டவனின் கோபத்திற்கிலக்காதவர்களையும் ஓர் அளவு காப்பாற்ற முயற்சிக்கவேண்டும்.

அநியாயகாரர்களையும் துர்கிர்த்தியக் காரர்களையும் பஹிஷ்காரஞ் செய்யும்பொழுது சிநேகம், பாந்தவியம் முதலிய சம்பந்தங்களைப் பாராட்டக்கூடாது. பிரியமுள்ள நேசனாயினும், நெருங்கிய பந்துவாயினும், விசேஷ செல்வாக்குள்ளவனாயினும், பொருள் படைத்தவனாயினும் வித்தியாசமின்றி எக்கொடியவர்களையும் பஹிஷ்காரம் செய்தேயாகவேண்டும். நற்செய்கைகளில் பற்றில்லாத துரோகிகள் கடவுளால் சிக்ஷிக்கப் படுவார்களாதலின், இவர்களையும் காபிர்களைப் போலவே (தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள்) பஹிஷ்காரஞ்செய்ய வேண்டும். இவர்கள் மீது அனுதாபங் கொள்வது பெருங்குற்றமாகும். இக்கொடுங் குற்றத்திற்காகப் பிரயச்சித்தம் (தௌபா) செய்யவேண்டும்.

எதேச்சாதிகாரம் படைத்தவர்களும் அநியாயத்தைத் தொழிலாக்கிக் கொண்டவர்களும் நல்வழியை அடையவே மாட்டார்கள். இவர்களின் செல்வாக்கு உலகில் வெகுகால மிருக்கமாட்டாது. கடவுளின் பிரஜைகளை ஒரு குறிப்பிட்ட காலம்வரை துன்பப்படுத்துவார்கள். இவர்கள் தங்களின் அடாத செய்கைகளை யொழித்து நன்னிலைமையை யடைய எத்துணை சந்தர்ப்பங்கள் அளிக்கப்படினும் இவைகளால் நன்மை எய்த மாட்டார்கள். முடிவில் கொடியவர்களெல்லோரு மழிந்து நாசமாகி விடுவார்கள். இவர்களின் நாமங்கூட அழிந்துபோகும். இவர்களின் ஆட்சி வேரற்றுப்போகும். இவர்களின் செல்வாக்கு பரந்துபோம். உலகில் உண்மையான ஆட்சி ஏற்பட்டுவிடும் ஏற்கனவே கஷ்டத்தை அனுபவித்தவர்கள் சுகமடைவார்கள்.

எதேச்சாதிகாரம் ஒழிந்த பிறகு உத்தமர்கள் ஜெயமடைவார்கள். இவர்களின் மீது ஆண்டவனின் கிருபை வருஷிக்கும்.

கடவுளிடத்தில் ஜெயத்தைக் கோருகிறவர்கள் முதன் முதலில் தங்களை நல்லவர்களாக்கிக் கொள்ள வேண்டும். நற்காரியங்களைச் சதா செய்கிறவர்களாயும், கெட்டகாரியங்களைச் செய்யாதவர்களாயுமிருக்க வேண்டும். தங்களால் நிகழ்ந்துவிட்ட தவறுகளை முன்னிட்டு பிராயச்சித்தஞ் செய்ய வேண்டும். சதா ஆண்டவனின் சமூகத்தில் கண்ணீர் சொரிந்தவர்களாயிருக்க வேண்டும்.

இவர்கள் முடிவில் ஜெயம் பெறுவார்களென்பது திண்ணம்.

# முஸ்லிம் சகோதரர்கள் உடனே காங்கிரஸில் சேரவேண்டும்

——( O. N. மஹமூது. )——

ஆம்! முஸ்லிம் லீக் முறிந்துவிட்டது. முறிந்துவிட்டது மாத்திரமல்ல; முழு வேகத்துடன், முழு மூச்சுடன் முறிந்துவிட்டது. இரு தேசக் கொள்கையை இதய பண்புடன் மனப் பூர்வமாக ஏற்று இன்று என் செய்வோம் என ஏங்குகிறார்கள். அவர்களைக்கண்டு இந்தியா நகைக்கிறது. "பாகிஸ்தான் அல்லது கபரஸ்தான்" என கோஷமிட்ட வாய்கள் பாகிஸ்தான் பாதாளத்தில் தள்ளப்படவேண்டுமென அவர்கள் வெளியிலேசொல்லாவிட்டாலும், ஏட்டிலே எழுதாவிட்டாலும், நாட்டிலே நம்பிக்கையை வளர்க்கச் சொல்லாவிட்டாலும் வாய் முணு முணுக்கிறது. "முஸ்லிம் லீக் வாழ்க" என முழங்கிய வாய்கள் - எழுதிய ஏடுகள் இன்றைய இந்தியாவிலே பரிகசிக்கப் படுகிறது. உணர்ச்சிப் பெருக்குடன் உத்வேகத்துடன் உளரிக்கொட்டிய 'லீக்' பேச்சாளர்கள் பாகிஸ்தான் கிடைத்தவுடன் பிழைப்புக்கு வழியில்லையென ஏங்குகிறார்கள். 'இஸ்லாத்திற்கு ஆபத்து. இந்தியா ஒரு உபகண்டம். தனி நாடு தங்களுக்குத் தேவை" என முஸ்லிம் பாமர மக்களை—ஏன்? படித்தவர்களைக்கூட ஏமாற்றிய அவர்கள் வாய்; எழுதிய கரம்; இன்று என்ன செய்வதெனத் தெரியாது தடுமாறுகிறது. ஏன் இந்த அவல நிலை? ஏன் அவர்கள் இருதேசக் கொள்கையை பகுத்தறிவற்ற பாமரத் தன்மையால் நம்பவேண்டும்? இது இன்றைய நிலையில் அதுவும் இழிநிலையில் இருக்கும் அவர்களுக்கு நாம் எடுத்துக்காட்டும் படிப்பினை. அவர்கள் நினைத்ததிலும் அர்த்தமுண்டு பாகிஸ்தான் கிடைத்தால் பாமானந்தத்துடன் இருக்கலாமென உளமகிழ்ச்சி கொண்டார்கள். ஜின்னா இருக்கிறார்; நமக்கென்ன குறைவு எனக் கருதினார்கள். இஸ்லாமிய ஆட்சியை இகமெங்கும் புகழச் செய்வோமென லீக் தலைவர்கள் பேசிய பேச்சு இன்று முஸ்லிம் பொதுமக்களின் உள்ளத்திலே உருபெராமல் உடைந்துவிட்டது.

முஸ்லிம்களின் ஆதரவு முழுதும் கிடைக்குமென கர்ஜனை செய்த கலிகுஸ்ஸமான் கனவேகத்துடன் சென்றுவிட்டார் காரச்சியை நோக்கி. அன்புடனே வாழ்வோம் என அளவுகடந்து சொல்லிய அப்துல் சத்தார் இஸாக் சேட் கொஞ்சமும் யோஜிக்காமல் பாகிஸ்தான் சென்று கெய்ரோவை நோக்கி ஓடிவிட்டார் பாகிஸ்தான் தூதராய். இன்னும் யார் ஓடுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது வீண் போகாது. ஏனெனில் இன்னல் செய்யும் இஸ்மாயில் கூட்டம் இதயம் நொருங்கி தஞ்சம், அபயம் என காரச்சியில் அடைக்கலம் புகும்.

ஒரு சமயம் காரச்சி அவர்களைப்பார்த்து இடமில்லையென கரங்களை விரித்தால்...........அதோகதியடைவார்களென்பதில் ஐயமில்லை. இதனால் ஓடும் இஸ்மாயில்கள் ஓலமிட்டுக்கொண்டே ஓடுவார்கள். "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்ற பழமொழிப்படி அவர்கள் செய்த குற்றத்தை அவர்களுடைய மனச்சாட்சியே குத்திக்காட்டும். அப்பொழுதுதான் தாங்கள் செய்த பெருந் தவறை, துரோகச்செயலைக்கண்டு மனம் வருந்துவார்கள்.

பாஸிஸ்ட் ஸ்தாபனமான முஸ்லிம் லீக் தன்னுடைய தவறான போக்கால் மண்ணைக் கவ்வும்; இந்தியாவை விட்டு ஒழிந்துவிடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை ஆகையால் தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்கிறேன். தாங்கள் இவ்வளவு காலமாக நம்பிவந்த முஸ்லிம்லீக் - அதன் பாஸிஸ்ட் தலைவர்கள் உங்களை பரதவிக்க விட்டு செல்லும் நாள் தூரத்திலில்லை என்பதை தெளிவாக உணரவேண்டும். அது மட்டுமல்ல; இன்றைய இழி நிலையிலிருந்து உயர்நிலையடைய-தலை வணங்காது தன் மானத்துடன் வாழ - உறுதி வழி நின்று உண்மையுடன் வாழ - ஐந்தாப்படையினரென்று ஐயப்படாமலிருக்க இன்றே, இப்பொழுதே இந்தியாவின் இணையற்ற மக்களின் கட்சியான காங்கிரஸில் மகிழ்ச்சியுடன் சேரவேண்டும்.

அப்பொழுதுதான் தாங்கள் சாந்தியுடனும் சலனமில்லாமலும் உங்களின் வாழ்க்கை படகை வளமுடன் செலுத்திக்கொண்டு போகலாம். எதிர்காலம் இன்னல் நிறைந்தது என்ன நேருமோ! என பயப்பட இடமிருக்கிறது. அதைத் தவிர்க்க நீங்கள் காங்கிரஸில் சேரவேண்டும். அப்பொழுது தான் உங்கள் லட்சியம் கைக்கூடும் இன்னலில்லாமல் இந்திய பிரஜையாக மகிழ்ச்சியுடன் வாழலாம்.

முன்கூட்டியே உங்களிடை எதிர்கால முடிவை தெரிவித்துவிட்டோம். ஏற்று நடப்பது உங்களின் இஷ்டத்தைப் பொருத்தகாரியம். மேதை மௌலானா ஆஸாத் பல ஆண்டுகளாக பக்குவமான முறையில் உங்களுக்கு புத்தி புகட்டியுள்ளார். ஆனால் அதை புறக்கணித்தீர்கள் செவிடன் காதில் சங்கு ஊதினால் போல ஒலித்தது உங்களுடைய செவிகளிலே இன்று அதே ஆஸாதை நம் மாபெரும் தலைவரான உங்கள் வாய் முணு முணுக்கிறது. மனச்சாட்சி அதை ஒப்புக்கொள்ளுகிறது. ஆதலால் இனி லீகை நம்பாமல் காங்கிரஸில் சேரவேண்டும். இல்லையேல்! நாம் சந்தேகத்துடன் பார்க்கப்படுவோம். நமக்கு இனி வாழ்வில்லையென்ற முடிவு ஏற்பட்டுவிடும்? இதை உணர்ந்து முஸ்லிம்கள் நடப்பார்களாக?





தஞ்சை ஜில்லா விற்பனை உரிமையாளர்:—

— K. கணேசன், தென்பாதி.(சீர்காழி) —

பல சிறந்த

அலாரம் டைம்பீஸ்கள்



$4\frac{1}{2}$" டயல் கைபிடியுடன் அழகிய கலர் கேஸ் மிகவும் உறுதியாக தயாரிக்கப் பட்டவை.

ரூபா 30/

ஜலால் & ஸன்ஸ்,
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்

மவுண்டு ரோடு, சென்னை

அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.

## "இறை துதி." - (K. M. ஷேக்பீர முஹம்மது, கல்லிடைக்குறிச்சி.)

பல்லவி

இறைவா! இறைவா!! இறைவா!!!

சரணங்கள்

1. மறையோ திடும்மா நிதியே!
மனமீ துறைவாய் பதியே!
குறைகள் கறைகள் களைவாய் சுழுவாய்
குணமும் பணமும் கனமும் அருள்வாய். (இ)

2. கருவி லிருக்கும் உயிர்க்கும்
கருதி யுணவை யளிக்கும்
கருணைக் கடலே! கவலை தவிர்ப்பாய்
கருணை புரிவாய் களிப்பே யளிப்பாய். (இ)

3. கருணை யுருவாம் காந்தி
கனிவா னமொழி ஏந்தி
கதியும் கலையும் செழிக்க உழைக்க
மதியும் மனமும் மகிழ்வும் பொழிவாய். (இ)

4. எழில்காங் கிரஸ்மா சபையே
பொழில்போல் பொழிய அருள்வாய்
எழிதாய் பணிகள் புரிந்தே சிறந்தே
மிளிர வரமே தருவாய் நிறைவே! (இ)

5. மதமாச் சரியம் மறைந்தே
மனமொன் றிமகிழ்ந் துறைந்தே
சதமிந் தியர்கள் சமமாய் இருந்தே
சகல சுகமும் பெறவே வரந்தா. (இ)

6. இனிஇந் தியர்ஓர் இனமாய்
இனிதாய் ஒருதாய் மகவாய்
இருதே சமெனு வினையால் விளைந்த
இடர்கள் தொலைந்தே வதிய அருள்வாய். (இ)

7. உழவும் தொழிலும் மலிய
உழலும் இடர்கள் நலிய
உழைப்பும் பிழைப்பும் உவப்பும் உயர
உழைக்கும் உறுதி எனக்குத் தருவாய். (இ)

8. முதலும் முடிவு மிலனே!
முதுமைப் புதுமைப் பொருளே!
முதலே! இதமே நிதமும் தருவாய்
முழுதும்உனையே தொழுவேன் அருள்வாய்.(இ)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.